ராணி காமிக்ஸ்
விண்வெளிவீரர்
பிளாஷ்கார்டன்
தோன்றும்
மனித வேட்டை
ரூ 2

"பளபள நிப்பு தோற்றம் ஜொலிப்பு
கேம்ளினால் என் ஹோம் ஒர்க் விறுவிறுப்பு."

மாயா பாஷாவின் ரகசியம் — கேம்ளின் ஃபவுண்டன் பேனாக்கள். அதன் உன்னத நிப்பு மளமளனு விறுவிறுனு எழுதும். ஆகவேதான் மாயா பாஷா தன் ஹோம் ஒர்க்கை ஃபடக்குனு முடிக்கிறான். விளையாட அதிக நேரம் கிடைக்குது.

camlin

கைகொடுக்கும் கை

Contract.CL.922.93.Tm

3

'இன்சாட் 2-பி'



தகவல்- தொடர்பு உள்பட பல்வேறு பணிகளுக்காக, உலக நாடுகள் ராக்கெட்டுகளை (சாட்டிலைட்) பறக்கவிடுகின்றன. இந்தியாவும் இதுபோன்ற பணிக்காக "இன்சாட்" ராக்கெட்டுகளை பறக்கவிட்டு உள்ளது. முதலில் பறக்கவிடப்பட்ட ராக்கெட்டு வெளிநாட்டு உதவியுடன் தயாரிக்கப்பட்டது.

அடுத்து இந்தியாவே இது போன்ற "இன்சாட்-2" ராக்கெட்டை தயாரித்து பறக்கவிட்டது. இந்த வரிசையில் கூடுதல் வசதிகளுடன் "இன்சாட் 2-பி" ராக்கெட்டை இப்போது இந்தியா தயாரித்துள்ளது.

1906 கிலோ எடை கொண்டது இந்த ராக்கெட்டு. இந்த "இன்சாட் 2-பி" ராக்கெட் வருகிற ஜுலை 9-ந்தேதி தென் அமெரிக்காவில் உள்ள பிரெஞ்சு கயானாவில், கோரு என்ற இடத்தில் உள்ள ராக்கெட் தளத்தில் இருந்து பறக்க விடப்படும்.

இந்த ராக்கெட்டுடன், ஸ்பெயின் நாட்டுக்கான ஒரு ராக்கெட்டும் பறக்கவிடப்படுகிறது. இந்த ராக்கெட்டுகளை பறக்க விடும் ஐரோப்பிய வானவெளி நிறுவனம், இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

"இன்சாட் 2-பி" ராக்கெட் பறக்கவிடப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளது.

இந்த ராக்கெட் பறக்க விடுவதற்கு தகுதியான அளவில், மிகவும் நல்ல நிலையில் இருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

விடுகதை!

(1) தங்கப் பழம்
திங்க முடியாது!

அது என்ன?

(2) ஒரு கரண்டி மாவுல
ஊர் எல்லாம் தோசை!

அது என்ன?

(3) சிவப்பு மணிபர்சு
உள்ளே சில்லறை.

அது என்ன?

(4) அச்சு இல்லாத சக்கரம்
அழகு காட்டும் சக்கரம்.

அது என்ன?

(5) ஊர் எல்லாம்
மூடிக்கிடக்கு
ஊறுகாய்ப் பானை
திறந்து கிடக்கு.

அது என்ன?

(6) சின்னக் குதிரைக்கு
நூறு கடிவாளம்.

அது என்ன?

(7) அள்ள முடியும்
கிள்ள முடியாது.

அது என்ன?

(8) நான் போட்ட
வெள்ளிக்கம்பி
யாராலும்
தூக்க முடியாது?

அது என்ன?

(9) கட்டிக் கிடந்த மகளை
விட்டுப் பிரிந்து வந்தேன்.

அது என்ன?

(10) சின்ன சிட்டுக்கு
எட்டு முழச் சேலை.

அது என்ன?

(11) காட்டில் பிறப்பான்
வீட்டில் சாவான்.

அது என்ன?

(12) சங்கீத வித்வான்
சமயத்தில் ஊசி
போடுவான்!

அது என்ன?

விடுகதை விடைகள்:–

1. தீ கங்கு
2. நிலா
3. மிளகாய்ப்பழம்
4. வளையல்
5. கிணறு
6. நெசவு தறி
7. தண்ணீர்
8. கோலம்
9. உமி
10. வெங்காயம்
11. விறகு
12. கொசு.

ராணி காமிக்ஸ்-215
(மாதம் இருமுறை இதழ்)

ஜூன் 1-15
1993

விண்வெளி வீரர்

பிளாஷ் கார்டன்

—தோன்றும்—

மனித வேட்டை

டாலி, சர்கோவ் ஆகியோருடன் அண்டவெளிக்குச் சென்றிருந்த பிளாஷ்கார்டன், வேலைகளை முடித்துவிட்டு பூமிக்குத் திரும்பத் தயாரானார். நண்பன் சர்கோவின் வருகைக்காகக் காத்திருந்தார்.
வேலை முடிந்துவிட்டது. புறப்படலாம் என்றால் சர்கோவை காண வில்லை!
எங்கே போயிருப்பார்?
பனி வேறு கொட்டத் தொடங்கிவிட்டது. ஆபத்தில் ஏதும் சிக்கியிருப்பாரோ!
அதுதான் எனக்கும் ஒன்றும் புரிய வில்லை!
இரண்டு மணி நேரமாக ஆளைக் காண வில்லையே!
சரி அவன் வரட்டும்! பசிக்கிறது. சாப்பிட ஏதாவது கிடைக்கிறதா, பார்ப்போம்.
பிளாஷ்கார்டன் கடலில் ஒரு மீனைப் பிடித்து சுட்டார்.
அப்படியா?
இந்த மீன் நல்ல சுவையாக இருக்கும்!
அப்போது கடலுக்குள் இருந்து ஒரு நீண்ட தலை எழுந்தது.

இந்தக் கடற்கரையில் மீனை விட்டால் வேறு என்ன கிடைக்கப் போகிறது!
கடலுக்குள் இருந்து வெளியே வந்த அந்த இராட்சத மிருகம், மெதுவாக அவர்களை நெருங்கியது.
திடீரென்று பிளாஷ்கார்டன் மீது சீறியது.
உஷ்... உஷ்... உஷ்...!
ஆ... டாலி! என்ன இது?
உஷ்...உஷ்...உஷ்...!
அது வாயைப் பிளந்தபொழுது பிளாஷ்கார்டன் கையில் இருந்த கம்பை அதன் வாய்க்குள் திணித்தார்.
ஆ... அய்யோ...!
இந்த மீனைச் சாப்பிடு!

உடனே அந்த மிருகம் வாய்க்குள் மாட்டிக்கொண்ட கம்போடு கடலுக்குள் சென்றது.
நம் சாப்பாடு அம்பேல்!
உயிர் பிழைத்ததே பெரிய விசயம்!
வா, டாலி புறப் படலாம்! இது ஆபத் தான இடம் போலி ருக்கி றது!
பிளாஷ்கார்டன் விண்வெளி விமானத்துக்கு வந்தார்.
பனி ஏன் இப்படிக் கொட்டுகிறது!
அப்போது—
பிளாஷ்...! அங்கே பாருங்கள்!
படகில் சர்கோவ் இருந்தார்.
சர்கோவ்!
பிளாஷ்கார்டன்!
சர்கோவ் படகைவிட்டு இறங்கி விண்வெளி விமானத்துக்கு ஓடிவந்தார்.

பிளாஷ்! உனக்கு ஒன்றும் ஆபத்தில்லையே? நீண்டநேரம் காக்க வைத்துவிட்டேனா?
இது ஆபத்தான இடமாக இருக்கிறது! அதான் புறப்பட்டோம்!
சாங் மன்னன்தான் பெரிய தலைவலி!
அண்டவெளியில் உள்ள நாடுகளை எல்லாம் அடிமைப்படுத்தப் பார்க்கிறானா!
அவனை பார்த்தால் மற்ற கோளில் உள்ளவர்கள் எல்லாம் நடுங்குகிறார்கள்! இப்பொழுதுகூட அவன் என்னைத் தேடிக்கொண்டிருப்பான்!
விண்மீன் நாட்டில்—
முட்டாள்கள்! பிளாஷ் கார்டனை தப்பிக்க விட்டுவிட்டீர்களே?
இந்தமுறை எப்படியோ தப்பிவிட்டான்!
கடலுக்குள் சென்று அடைக்கலம் புகுந்து கொண்டான்!
இந்த கதை யெல்லாம் என்னிடம் வேண்டாம்!
அண்டம் முழுவதையும் என் பிடிக்குள் கொண்டுவரப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன் அந்த மானிடன் என் திட்டத்தை தவிடு பொடியாக்க பார்க்கிறான்!

அவன் இன்னும் அண்டவெளியைத் தாண்டியிருக்க மாட்டான்!
அவனை உயிரோடு பிடித்து வாருங்கள்!
நமது விமானங்களை ஏவிவிடுங்கள்!
அவனை எங்கிருந்தாலும் பிடித்துக்கொண்டுவர கட்டளையிடுங்கள்!
உடனே விண்வெளி விமானங்கள் பிளாஷ்கார்டனை தேடிப் புறப்பட்டன.
இந்த விமானத்தை இன்னும் கொஞ்சம் மாற்றி அமைத்திருந்தால் அதிக வேகம் கிடைக்கும்!
இந்த வேகம் போதாதா?

விண்மீன் நாட்டு விமானமும் இதுவும் ஒரே சக்தியுடையது!
நாம் எப்படி தப்பிப்பது?
வேறு வழி இல்லையா?
பேசாமல் விமானத்தை ஆர்போரியாவில் இறக்கினால் என்ன?
அரசே! பிளாஷ்கார்டன் ரொம்ப காலமாகவே உங்களுக்கு சிம்மசொப் பனமாக இருக்கிறான்!
படைபலம் எதுவும் இல்லாமல் தனி மனிதனாக இருந்துகொண்டு உங்களை எதிர்க்கிறானே?
ஒரு மானிடன் அண்டத்திற்கு வந்து என்னிடம் மோதிப் பார்க்கிறான்.

விடமாட்டேன்! அவனை உயிரோடு விட மாட்டேன்!
சர்கோவ்! விண்மீன் நாட்டு விமானங்கள் நம்மை தேடி வருகின்றன!
பிளாஷ்! இப்பொழுது என்ன செய்வது?
அதற்குள் சுற்றிவளைத்து விட்டார்களே!
அவர்களுக்கு போக்கு காட்டிவிட்டு தப்பிச் செல்ல வேண்டும்!
அதற்குள் விண்மீன் நாட்டு விமானங்கள் குண்டுகளை உமிழ்ந்தன.
பிளாஷ்! விமானத்தில் குண்டு விழுந்துவிட்டது! இனி தப்பிக்க முடியாது!
உடனே சாங் மன்னனுக்கு தகவல் பறந்தது.
அரசே! அந்த மானிடர்களின் விமானத்தை ஆர்போரியாவுக்கு அருகில் சுட்டு வீழ்த்தி விட்டோம்!
பிளாஷ்கார்டனை பிடித்து உடனே என்னிடம் கொண்டு வா!

நிச்சயம் அவனை கொண்டு வருகிறோம்!
பிளாஷ் விண்வெளி விமானத்தை தரை இறக்கி காட்டுக்குள் பதுங்கிக் கொள்ள இடம் தேடினார்.
டாலி! கொஞ்சம் பொறுத்துக்கொள்!
சர்கோவ்! ஏதாவது மரத்தில் பதுங்கு வோமா?
அவர்கள் கண்டிப்பாக நம்மை தேடி வருவார்கள்.
அவர்கள் இந்தக் காட்டுக்குள்தான் சென்றிருக்க வேண்டும்! தேடுங்கள்!
டாலி எப்படி இருக்கிறது!
எனக்கு ஒன்றும் இல்லை! என்னை இறக்கி விடுங்கள்!
அவர்கள் அருகில் வந்து விட்டார்கள்! வா! மரத்தில் பதுங்கிக் கொள் ளலாம்!

இரண்டு பேர் பிளாசை தேடி அங்கே வந்தார்கள்.
கமாண்டர்! அவர்கள் இங்கே வந்ததற்கான அறிகுறி இல்லையே?

அவர்களை காணவில்லை என்ற தகவலை மன்னனுக்குச் சொல்ல வேண்டும்!
அரசே! காட்டில் தேடிவிட்டோம். அவர்களை காணவில்லை!

முட்டாள்! இதைச் சொல்ல வெட்கமாக இல்லை! நாலாபுறமும் விமானத்தில் தேடுங்கள்!
சாங் மன்னன் ஆத்திரத்தில் கொப்பளித்தான்.

உடனே விண்வெளி விமானங்கள் பிளாசை தேடிப் புறப்பட்டன.
நாலாபுறமும் தேடுங்கள்!

சர்கோவ், பிளாஷ், டாலி மூவரும் காட்டுக்குள் விரைந்து கொண்டிருந்தார்கள்.
காட்டில் திடீர் திடீரென்று காட்டுத்தீ பற்றிக்கொண்டு எரியும். பிறகு தானாகவே தீ அணைந்து போகும்.
இந்தப் பக்கம் தீ எரிகிறது! வேறு பாதையில் செல்வோம்!

இப்படிப் போனால் ஆபத்து இருக்காது என நினைக்கிறேன்!
வாருங்கள் விரைந்து செல்லலாம்!

உஷ்...உஷ்...உஷ்...
பிளாஷ்! அங்கே பாருங்கள்!
கொர்...கொர்...!
அங்கே இராட்சத மிருகங்கள் பல தினுசுகளில் அவர்களை நோக்கி படையெடுத்து வந்தன.
கொர்...கொர்...
டுர்டுர்டுர்...
உர்உர்உர்...!
பிளாஷ்! என்ன இது?
ஆ...!
இந்த பள்ளத்துக்குள் குதித்து விடுவோம்!
மூவரும் அருகில் இருந்த பள்ளத்துக்குள் குதித்தார்கள்.

அப்பாடி! இனி ஆபத்தில்லை!
ஒருவழியாக இராட்சத மிருகங்களிடம் இருந்து தப்பி வந்து விட்டோம்!

ஆனால்— அங்கே இன்னொரு ஆபத்து அவர்களுக்காக காத்திருந்தது.
ஆ... பாம்புகள்!
உஷ்...உஷ்...
உஷ்...உஷ்...!
பத்துப் பதினைந்து விஷப் பாம்புகள் அவர்களை நெருங்கி வந்தது.

பிளாஷ்! இவை நம்மை கடிக்காமல் விடாது போலிருக்கிறதே!
உஷ்...உஷ்...உஷ்...உஷ்...!

டாலி! கொஞ்சம் அமைதியாக இரு!
இவைகளை எப்படி சமாளிக்கலாம் என்று யோசிக்கிறேன்.
பிளாஷ்! நாம் உயிரோடு பூமிக்கு திரும்பப் போவதில்லை என்று நினைக்கிறேன்!
மனதை தளர விடாதே டாலி! இப்போது பார்!
உடனே பிளாஷ்கார்டன் கதிரியக்க துப்பாக்கியை எடுத்த பாம்புகளை நோக்கி சுட்டார்.
இத்தோடு காலி!
டுமீல்... டுமீல்...!
கதிரியக்கம் பாம்புகளை பொசுக்கியது.
முதலில் டாலியை மேலே அனுப்பு கிறேன்!
நான் இவைகளை கவனித்துக் கொள்கிறேன்!
டாலியை பயப் படாமல் இருக்கச் சொல்!
இதோ மேலே போய்விட் டாள்!

டாலியை மேலே ஏற்றிவிட்டு பிளாஷ்கார்டன் வந்தார்.
சர்கோவ்! நீயும் மேலே போ! பாம்புகளை நான் பார்த்துக்கொள்கிறேன்!
ஆ...ஆ... அய்யோ!
மேலே சென்ற டாலிக்கு பெரிய ஆபத்து ஒன்று இராட்சத உருவில் காத்திருந்தது. அப்போது சர்கோவும் மேலே வந்தார்.
இராட்சத மிருகம் ஒன்று டாலி மீது பாய வந்தது. சர்கோவ் உடனே துப்பாக்கியை எடுத்து சரமாரியாக சுட்டார்.
கொர்....!
கொர்...!
டுமீல்...!
டுமீல்...!
ஆத்திரமடைந்த மிருகம் சர்கோவை தாக்கியது.
ஆ...! அய்யோ!
படார்...!
சர்கோவின் துப்பாக்கி எகிறி விழுந்தது.
உடனே அந்த மிருகம் சர்கோவை அப்படியே பிடித்துத் தூக்கியது.
ஆ... என்னை விட்டுவிடு!
ஏய்... அவரை விடு!

டாலி பதட்டத்துடன் துப்பாக்கியை எடுத்து சுட்டாள்.
டுமீல்...!
கதிரியக்கக் கதிர்களுக்கு இது மசிய வில்லையே!
டாலி...! தலையைப் பார்த்து சுடு!
உடனே டாலி அதன் தலைக்கு குறிவைத்தாள்.
கொர்...கொர்... கொர்...கொர்...!
டுமீல்... டுமீல்...!
கதிரியக்கத்தின் வெப்பத்தை தாங்காமல் அது அலறியது.
வெப்பம் தாக்க தாக்க அதன் பிடி தளர்ந்தது. சர்கோவ் அதன் பிடியில் இருந்து விடுபட்டார்.

பிளாஷ்கார்டன் பாம்புகளை கொன்றுவிட்டு பள்ளத்தில் இருந்து மேலே வந்தார்.
இது செத்துவிட்டது! வாருங்கள் தப்பிவிடலாம்!
டாலி! என்ன நடந்தது!
திடீரென்று அந்த இடத்தில் காட்டுத்தீ பற்றிக்கொண்டு மளமள வென்று பரவ ஆரம்பித்தது.
தீ வேறு பற்றிக் கொண்டது. காற்றும் அதிகமாக இருக்கிறதே!
இங்கே நின்றால் ஆபத்து. வாருங்கள் ஓடிவிடுவோம்!
மூவரும் ஓட்டம்பிடித்தார்கள்.
அதோ தண்ணீர்! ஆறு ஒன்று செல்கிறது!

உடனே ஒரு மரக்கட்டையை ஆற்றுக்குள் தூக்கிப் போட்டு அதைப் பிடித்துக்கொண்டு மூவரும் சென்றார்கள்.
காட்டுத்தீயில் இருந்து தப்பிவிட்டோம்! அடுத்து என்ன ஆபத்து காத்திருக்கிறதோ தெரிய வில்லை!
அய்யோ இங்கே நிறைய முதலைகள் கிடக்கிறதே!
அவர்கள் முதலையின் கண்ணுக்கு படாமல் மரக்கட்டையோடு மறைந்து சென்றார்கள்.
முதலைகள் நம்மைப் பார்க்கவில்லை!
ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் லாவகமாக தப்பி வந்துவிட்டோம்!

விண்மீன் நாட்டில்—
அரசே! பிளாஷ்கார்டன் காட்டுத்தீக்கு இரை யாகிவிட்டான்!
ஆர்போரியா நாட்டில்—
பிரான்! விண்மீன் நாட்டின் செய்தியை கேட்டாயா?
நமது எல்லையில் அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது!
பிளாஷ்கார்டன் நிச்சயம் இறந்திருக்கமாட்டார். அவர் சாதாரண ஆள் இல்லை. எங்காவது பதுங்கியிருக்கக்கூடும்! சாங் மன்னன் தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பான்!
அதனால் பிளாஷ்கார்டனை தேடிக் கண்டுபிடித்து இங்கே கொண்டுவந்துவிடவேண்டும்! அவரை அடையத்தான் முடியவில்லை. உதவி செய்கிற பாக்கியமாவது கிடைக்கட்டும்!

பிளாஷ்கார்டனை தேடிக் கண்டுபிடித்து அசூராவிடம் கூட்டிவாருங்கள்!
இப்பொழுதே ஏற்பாடு செய்கிறேன்!
நிச்சயம் அவரை கண்டு பிடித்துகொண்டு வருகிறோம்!
காட்டில்— மூவரும் ஆற்றில் இருந்து கரை ஏறினார்கள்.
காட்டுத்தீ தணிந்துவிட்டது!
வா...! ஆர்போரியா அருகில்தான் இருக்கிறது!
அதோ பெரிய மரங்களாக தெரிகின்றதே அதுதான் ஆர்போரியா நாடு! நாம் அங்கே செல்லலாம்!
இன்னும் அதிக தூரம் போகவேண்டியிருக்கும் போலிருக்கிறதே!

டாலி! கொஞ்சம் தூரம்தான்! போய் விடலாம்!
இன் ஆபத்திருக்காது!
அப்பப்பா இடையிடையே காட்டுத்தீ வேறு ஆளை விரட்டுகிறது!

திடீரென்று இராட்சத மிருகங்கள் அந்த வழியாக அவர்களை கடந்து சென்றது.
டாலி! படுத்துக் கொள்!
நல்லவேளை அவைகள் நம்மை கவனிக்கவில்லை!

அடப்பாவமே அதற்குள் வவ்வால் வேறு விரட்டுகிறதே!
ஓடுங்கள்!

இங்கே மறைந்துகொள்ள இடமில்லையே!
வவ்வால் கூட பெரிதாக இருக்கிறதே!
இது வவ்வால் இல்லை! பறக்கும் அணில்கள்!

என்னது?
ஆமாம். இது பறக்கும் அணில்கள்! வவ்வாலை விட அதிக பலமிக்கது!

அணில்கள் அவர்களை சுற்றிச்சுற்றி வடட்மடித்தன.
கீச்...கீச்...கீச்...கீச்...!
கீச்...கீச்...கூச...கீச...!
போ! அந்தப் பக்கம் போ!

உடனே பிளாஷ்கார்டன் கதிரியக்க துப்பாக்கியை எடுத்து சுட்டார்.
ஒன்றையும் உயிரோடு விடக்கூடாது. விட்டால் ஆளையே தூக்கிவிடும் போலிருக்கிறது!

பத்து அணில்களை கொன்றால் நூற்றுக்கணக்கான அணில்கள் வருகின்றதே!

திடீரென்று அங்கே காட்டுத்தீ பரவியது.
டாலி! நல்லவேளை காட்டுத்தீ வந்து நம்மை காப்பாற்றிவிட்டது!

நெருப்பைக் கண்டதும் அணில்கள் காத தூரம் ஓடிவிட்டன!
சே! அணில்கள் கூட நமக்கு எதிரிகளாகிவிட்டன!
சர்கோவ்! பின்னால் பாருங்கள்!
அணில் ஒன்று சர்கோவை நோக்கி பறந்து வந்தது.
சர்கோவ்!

அணில் சர்கோவின் கையை கடித்தது
ஆ...ஆ...
என் கைபோச்சு!
சுட்டுத்தள்ளுங்கள்! அணில் கடித்த இடத்தை வெட்டி அதன் நச்சுவை வெளியே எடு! இல்லை நச்சு என்னைக் கொன்று விடும்!
சர்கோவ்!
தைரியமாக இரு! நான் எடுத்துவிடுகிறேன்!
பிளாஷ் கத்தியை உருவினார்.
வலியை கொஞ்சம் பொறுத்துக்கொள்!
ஆ... நீங்கள் என்னைக் கொல்லப் பார்க்கிறீர்கள்!
திடீரென்று சர்கோவ் ஒருமாதிரியாக பேசினார்.

காட்டுத்தீ மட்டும் வராவிட்டால் அணில்கள் மூவரையும் கடித்துக் குதறி இருக்கும்!
சர்கோவ்! நீங்கள் ஓய்வெடுங்கள்!
உடம்பு அனலாக கொதிக்கிறதே!
இல்லை... இல்லை... என்னை விடுங்கள்!
நான் என் வழியில் செல்லுகிறேன். நீங்கள் என்னை கொல்லப் பார்க்கிறீர்கள்!
சர்கோவ் திடீரென்று பள்ளத்துக்குள் குதித்தார்.
பள்ளத்துக்குள் மயங்கிக் கிடந்த அணில்கள் ஒவ்வொன்றாக விழித்துக்கொண்டன.

அவைகள் ஒட்டுமொத்தமாக சர்கோவை கடிக்க பாய்ந்து வந்தன.

கொலைகார
அணில்களே! போங்கள்!
அந்தப் பக்கம்!

சர்கோவ் துப்பாக்கியை எடுத்தார்.
இப்பொழுது வாருங்கள்! நான் சாகப் போகிறேன்! அதற்குள் உங்களையும் ஒருகை பார்த்து விடுகிறேன்!

அதேநேரம் காட்டில் அசூராவின் ஆட்கள் பிளாஷ்கார்டனை வலைப் போட்டு தேடினார்கள்.
அவர்களை காண வில் லையே?
காட்டுத்தீ பரவிய இடத்தை யெல்லாம் பார்த்தாகி விட்டது! காண வில்லை!
பிரானுக்கு தகவல் சொல்வோமா!
நில்லுங்கள்! ஏதோ சத்தம் கேட்கிறதே!
ஆ... பறக்கும் அணில்களின் சத்தம் போலிருக்கிறது!
அனைவரும் முதலில் இங்கிருந்து தப்பிவிடுங்கள்! கொலைகார அணில்கள் படையெடுத்து வருகின்றன! ஓடுங்கள்!
அப்படியா?
கீச்கீச்...கீச்..., கீச்...கீச்...!
அனைவரும் வாயுத் துப்பாக்கியை வைத்து சுட்டுத்தள்ளுங்கள்!

ஏதோ மனிதக்குரல் கேட்கிறதே!
விடாதே! விரட்டு!
வீரர்கள் வாயுத் துப்பாக்கியை வைத்து சராமாரியாக சுட்டார்கள்.
அதோ ஒருவன் இருக்கிறான்! அவனை விசாரித்தால் பிளாஷ்கார்டனைப் பற்றி தெரியும்.
உன்னுடன் வந்த மற்ற இருவரையும் எங்கே?
பிளாஷ்! டாலியா? இருவரும் காட்டுத்தீக்கு இரையாகிவிட்டார்கள்! ஆ...! தண்ணீர்... தண்ணீர்...!
காட்டிலிருந்தவர்கள் முரசு மூலமாக பிளாஷ்கார்டன் இறந்து விட்ட செய்தியை பரப்பினார்கள்.
பிளாஷ்கார்டன்! இறந்துவிட்டாரா?
நம் வீரர்கள் எல்லா இடங்களையும் அலசி ஆராய்ந்திருப்பார்கள்!

பிளாஷ்கார்டன் நிச்சயம் இறந்திருக்க மாட்டார்!
எதற்கும் நம் வீரர்களை நன்றாக தேடச் சொல்லுங்கள்!
நாம் திரும்பிச் சென்றால்தான் இவன் ஒருவனை யாவது காப்பாற்ற முடியும்!
ஓ.கே. வாருங்கள் புறப்படலாம்!
அங்கே பிளாஷ் கார்டனும், டாலியும் ஒரு மரத்தில் ஓய் வெடுத்துக் கொண்டிருந் தார்கள்.
வா, டாலி! புறப்பட லாம்!
அணில்கள் இன்னும் வருமா?
இல்லை! சர்கோவை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்!
அவருக்கு ஆபத்து எதுவும் நேர்ந்திருக்கக்கூடாது!

பிளாசும், டாலியும் சர்கோவை தேடி அலைந்தார்கள்.
இந்தப் பாதையில் யாரும் வந்தற்கு அறிகுறியே இல்லையே?
பிளாஷ்! ஏதோ முரசு சத்தம் கேட்கிறதே?
உடனே பிளாஷ்கார்டன் மரத்தில் ஏறி நோட்டம் விட்டார்.
டாலி! அசூராவின் ஆட்கள் போல தெரிகிறது!
சீக்கிரம் அவரை படகில் ஏற்றுங்கள்!
டாலி இந்தப் பக்கமாக சென்றால் அவர்களை அடைந்துவிடலாம்!
இருவரும் தலைதெறிக்க ஓடினார்கள்.
அதற்குள் போய்விட்டார்களே!
இதுவரை வந்திருக்கிறார்கள். அதன்பிறகு ஆற்றுக்குள் இறங்கியிருக் கிறார்கள்!
நாமும் ஆற்றை பின் தொடர்வோமா?

அநேகமாக அவர்கள் படகில் சென்றிருக்க வேண்டும்!
ஆற்றில் நீரோட்டம் வேறு அதிகமாக இருக்கிறதே!
அதோ அந்த திருப்பத்தில் ஆறு முடிகிறது! இன்னும் கொஞ்சதூரம்தான்!
பிளாஷ்...! அடுத்து என்ன ஆபத்து காத்திருக்கிறதோ தெரியவில்லை!
பிளாஷ்... சகதியாக இருக்கிறது! ஆ... என்னை உள்ளே இழுக்கிறதே!

பிளாஷ்...! சகதி என்னை இழுக்கிறது!
என்னை காப்பாற்றுங்கள்!
டாலி என் கையை இறுக்கிப் பிடித்துக் கொள்!
பிளாஷ் மரத்தை பிடித்துக் கொண்டு டாலியை இழுத்தார்.
தக்கசமயத்தில் டாலியை சுண்டி இழுத்து வெளியே தூக்கிப் போட்டார்.
வா... டாலி!
ஆனால் டாலியை தூக்கிப் போட்ட பிளாஷ்கார்டன் நிதானம் தவறிப்போய் சகதிக்குள் விழுந்தார்.
அய்யோ! டாலி நான் சகதிக்குள் மாட்டிக் கொண்டேனே...!
பிளாஷ்... கொஞ்சம ம்பாறுங்கள். இதோ வந்துவிட்டேன்!
டாலி சீக்கிரம்! கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே செல்கிறேன்!
டாலி அருகில் இருந்த கொடியை பிடித்து இழுத்தாள்.
கொடியை பிடுங்கி பிளாஷ்கார்டனிடம் தூக்கிப் போட்டாள்.
பிளாஷ்கார்டன் கொடியை பிடித்து மெதுவாக மேலே வந்தார்
டாலி! உன் யோசனை அருமை!

பிளாஷ்...! உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே!
இல்லை டாலி! விரைவாக செயல்பட்டு என்னை காப்பாற்றி விட்டாய் ரொம்ப நன்றி!
பிளாஷ்! அதோ ஆர்போரியாவுக்கு அருகில் உள்ள காட்டுக்கு வந்துவிட்டோம்!
மரம்கூட இராட்சத தோற்றத்துடன் காணப்படுகிறதே!
அப்போது– இரட்டை துதிக்கையை கொண்ட இராட்சத யானை ஒன்று அவர்களுக்குப் பின்னால் வந்தது.

சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த பிளாஷ்கார்டனும், டாலியும் அதிர்ந்து போனார்கள்.
உர்ர்ர்...!
அடக்கடவுளே! இது என்ன புதுக் குழப்பம்?
டுர்ர்ர்...!
பிளாஷ்...! எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது!
டாலி! விரைவாக இந்த மரத்தில் ஏறு!
பிளாஷ்! நாம் வசமாக மாட்டிக் கொண்டோம்!
அந்த யானை டாலியை பிடித்து கீழே இழுத்துப் போட்டது.
ஆ... அய்யோ...!

உடனே பிளாஷ்கார்டன் கதிரியக்கத் துப்பாக்கியால் சுட்டார்.
டுர்ர்ர்ர்...
டுமீல்...
டுமீல்...!
உர்ர்ர்ர்...
உர்ர்ர்..!
ஆத்திரமடைந்த யானை பிளாஷ்கார்டன் பிடித்திருந்த மரவிழுதை இழுத்துப் போட்டது.
ஆ...!ஆ...!
டுர்ர்ர்...!
டுர்ர்ர்...
விழுது அறுந்து பிளாஷ்கார்டன் கீழே விழ துப்பாக்கி வேறு பக்கம் எகிறி விழுந்தது.
உடனே யானை முன்கால்களைத் தூக்கி பிளாஷ்கார்டனை மிதிக்க முயன்றது.
மிதித்தால் சட்னியாகி விடுவேன்!

உடனே பிளாஷ் மின்னல் வேகத்தில் நகர்ந்தார்.
யானையிடமிருந்து எப்படித் தபபிப்பது?


இரட்டை துதிக்கையுடன் விகாரமான தோற்றம்! சாதா ரண யானையைவிட அதிக பலமிருக்கும் போலிருக்கிறது!
பிளாஷ்கார்டன் மரங்களுக்கிடையே யானைக்கு போக்கு காட்டினார்.

ஒரு மரத்தின் மீது படர்ந்திருந்த இராட்சத கொடிகள் சுருள் சுருளாக தரைவரை தொங்கிக்கொண்டிருந்தன. அந்த யானை அங்கே வந்ததும் கொடிகள் 'லபக்'கென்று யானையை பிடித்துக்கொண்டது.
யானை அந்த கொடியின் பிடியில் சிக்கித் திணறியது.
அடேயப்பா! இது என்ன கொடி யானையை இறுக்கி பிடித்துக்கொண்டதே!

உடனே பிளாஷ் மயங்கிக் கிடந்த டாலியை தூக்கினார்.
டாலி! எழுந்திரு!
இதுதான் சமயம். வா, ஓடிவிடலாம்:
அதற்குள் அந்த உயிர்குடிக்கும் கொடி பிளாஷ்கார்டனை சுற்றி வளைத்து பிடித்துக் கொண்டது.
ஆ...! இறுக்கு கிறதே!
அதற்குள் டாலி மயக்கம் தெளிந்து எழுந்தாள்.
என்னாச்சு! பிளாசை எங்கே காணோம்! யானை போய் விட்டதா?
பிளாஷ்... என்னைவிட்டு எங்கே போயிருப்பார்!
அப்போதுதான் டாலி மேலே பார்த்தாள். அதிர்ந்தாள்.
அடக்கடவுளே! பிளாஷ்...!

பிளாஷ்...! உங்கள் துப்பாக்கியால் சுடப் போகிறேன்! பயப் படாதீர்கள்!
வேண்டாம்! டாலி நீ போய் விடு! கொடி உன்னையும் பிடித்துக் கொள்ளப் போகிறது!

அடுத்தவிநாடி— அந்த பயங்கரமான கொடி டாலியையும் பற்றிக் கொண்டது.
ஆ...! என்னையும் பிடித்துக்கொண்டு விட்டதே! ஆ...!

டாலி! சொன்னேன் கேட்டாயா? நீயே வந்து வம்பில் மாட்டிக் கொண்டாய்!
ஆ...! என் கை போச்சு!

பிளாஷ்... உடம்பை இறுக்குகிறது. எலும்பு நொருங்கிவிடும் போலிருக்கிறது!
டாலி! அங்கே பார்! யானையையே தூக்கி விட்டது! நாமெல்லாம் எந்த மூலைக்கு
ஒருவேளை இது இரத்தக் காட்டேரியாக இருக்கலாமோ...!
அதோ என் துப்பாக்கி!
துப்பாக்கி என் கைக்கு கிடைத்தால் உதவியாக இருக்கும்!
துப்பாக்கி கொடியில் சிக்கியிருந்தது

கொடி துப்பாக்கியைக் கூட விட்டு வைக்கவில்லை!
இன்னும் கொஞ்சம்!
பிளாஷ் துப்பாக்கியை எடுக்க முயன்றார்.
சிறிது நேர முயற்சிக்குப் பிறகு துப்பாக்கி கைக்கு எட்டியது.
ஆ... துப்பாக்கி கிடைத்து விட்டது!

உடனே பிளாஷ் கார்டன் துப்பாக்கியை எடுத்து மரத்தின் தண்டுப் பகுதியில் சுட்டார்.
ஒருவேளை என் துப்பாக்கிக்கு பலன் கிடைக்கலாம்!
டுமீல்...

கதிரியக்கக் கதிர்கள் மரத்தை சாம்பலாக்கி விட்டால் நாம் தப்பி விடலாம்!
டுமீல்...
டுமீல்...

ஆகா! மரம் தீப்பிடித்துவிட்டது. இனி கொடியின் பிடி தளர்ந்துவிடும்!
நெருப்பு அருகில் வரவர கொடியின் பிடி தளர்கிறது பார்த் தாயா டாலி!
சிறிது நேரத்தில் கொடியின் பிடி முற்றிலும் தளர்ந்து போனது.
ஆகா விடுதலை கிடைத்து விட்டது!

இந்த பழாய்ப்போன கொடி நம்மை என்ன பாடு படுத்திவிட்டது!
இப்படி ஒரு கொடி இருப்பதை இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன்!
அண்டவெளியில் எல்லாமே வித்தியாசமாகத்தான் இருக்கும் டாலி!
இந்தப் பக்கம்வா! நெருப்பு ஜுவாலைவிட்டு எரிகிறது!
எத்தனை கண்டத்திலிருந்து தப்பி வந்திருக்கிறோம்!
ஒவ்வொரு தடவையும் என் உயிர் போய் போய் வருகிறது!

இனி ஆபத்து இருக்காது! ஆர்போரியாவை நெருங்கி விட்டோம்!
இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது!
ஆனால் அவர்களுக்கு இன்னொரு ஆபத்து காத்திருந்தது. காட்டுவாசி ஒருவன் பாறைக்குப் பின்னால் இருந்து அவர்களை நோட்டமிட்டான்.
டாலி! இங்கே கால் தடங்கள் இருக்கின்றதே!
அய்யோ! என்ன ஆபத்து காத்திருக்கிறது என்று தெரியவில்லையே?
பதட்டப்படாதே டாலி! அப்படியொன்றும் ஆபத்திருக்காது!
அசூராவின் இடத்துக்கு வந்துவிட்டோம்! இனி பயப்படத் தேவையில்லை!
இன்னொரு காட்டுவாசி மரத்தின் மீது நின்றுகொண்டு இருந்தான். அவர்களுக்கு வால் இருந்தது.

திடீரென்று நான்கைந்து காட்டு வாசிகள் அவர்களை வழிமறித்தார்கள்.
முட்டாள்! யாரடா நீங்கள்?
இதோ வாங்கிக் கொள்ளுங்கள்!
ஆ...
கும்...!
அம்மா!
டேய் மரியாதையாக ஓடி போங்கடா? இல்லையென்றால் சுட்டுத்தள்ளி விடுவேன்!
உடனே பிளாஷ் கார்டன் துப்பாக்கியை எடுத்து சுட்டுத்தள்ளினார்.
ஆ... அய்யோ...!
டுமீல்...!

கதிரியக்கத்தை தாங்க முடியாமல் காட்டுவாசிகள் ஓட்டம் பிடித்தார்கள்.
டுமீல்...!
ஆ...!
டுமீல்...!
எங்களிடம் விளையாட்டு காட்டினால் உயிரை விட வேண்டியதான்!
காட்டுவாசிகள் தலை தெறிக்க ஓடினார்கள்.
பாவிகள் என்னை முரடனாக்கி விட்டார்கள்!
டாலி...! டாலி...!

வா டாலி! அவர்கள் போய் விட்டார்கள்!
டாலி...! டாலி...!
அடப்பாவிகள்! டாலியை கடத்திச் சென்றுவிட்டார்கள்?
உங்களை விடமாட்டேன்! மரியாதையாக டாலியை ஒப்படைத்து விடுங்கள்!
காட்டுவாசி ஒருவன் டாலியை தூக்கி சென்றுகொண்டிருந்தான்.

அதோ டாலியை தூக்கிச் செல் கிறார்கள்!
இனி துப்பாக்கிக்கு வேலை இல்லை! தந்திரமாகத்தான் அவர்களை முறியடிக்கவேண்டும்!
பிளாஷ் கார்டன் மேலே இருந்து கடைசியாக சென்றுகொண் டிருந்தவன் மீது பாய்ந்தார்.
டேய் காட்டு மிராண்டி நாயே!
டாலியை எங்கடா தூக்கிச் செல்கிறீர்கள்
ஆ...!
சடக்...!
அவன் கழுத்து ஒடிந்தது.
அவனை வீழ்த்தியபோது அடுத் காட்சிவாசி பிளாஷ் கார்டனைப் பார்த்தான்
பார்த்துவிட்டான்!

வாடா! இங்கே வாடா!
இவனுக்கு ஏற்பட்ட கதியான் உனக்கும்!
அவன் கையில் ஆயுதத்துடன் பிளாஷை நெருங்கினான்.
வா! அடுத்தவனுக்கு தெரியாமல் உன் கதையை முடிக்கி றேன்!
பிளாஷ் கார்டன் காட்டுவாசிகள் ஒவ்வொருத்தரையும் நிலைகுலையச் செய்துவிட்டு முன்னேறினார்.
டாலியை எங்கே கொண்டு செல் கிறார்கள்?

இன்னும் மூன்று பேர் இருக்கிறார்கள்!
ஓர் இடத்தில் டாலியை படுக்க வைத்தார்கள்.!
ஓய்வெடுக்கப் போகிறார்களா?
திரும்பிப் பார்த்து அவர்களின் கூட்டத்தை காணாது அதிர்ச்சியடைப் போகிறார்கள்! அதற்குள் நான் முந்தி விடவேண்டும்!
பிளாஷ் துப்பாக்கியை எடுத்து சுட்டார்.
டுமீல்...!

ஆ... உடம்பு எரிகிறதே....! ஆ...!
என்னாச்சு!

மரியாதையாக அவளை விட்டுவிட்டு ஓடுங்கடா?

ஆனால் ஒருவன் டாலியை நோக்கி ஆவேசமாக போனான்.
ஆ! என்னை விட்டுவிடு!

டாலியை முடியை பிடித்து உலுக்கினான்.
ஆ... ஆய்... அம்மா!
அதற்குள் பிளாஷ் துப்பாக்கியை அவனை நோக்கித் திருப்பினார்.
டுமீல்...!
ஆ...!
டாலி! எழுந்திரு! வா தப்பிவிடலாம்!
பிளாஷ் கார்டன் அவளைக் கூட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்தார்!
பிளாஷ்! என்னால் இனி ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது!
கொஞ்சம் பொறுத்துக்கொள்! தப்பித் செல்ல இதுதான் சரியான நேரம்!

சே! இந்த அண்டவெளியை நினைத்தால் வெறுப்பாக இருக்கிறது!
கொடிய மிருகங்கள் இராட்சத மனிதர்கள். உயிரை கையில் பிடித்துக்கொண்டு ஓட வேண்டியிருக்கிறது!
இனி இந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்கமாட்டேன்! சே! என்ன வாழ்க்கை இது!
அண்டத்தில் இப்படித்தான் மனிதர்களை வெறித்தனமாக வேட்டையாடுவார்களா?
டாலி கலங்காதே! வாழ்க்கை என்றால் எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும்!
எல்லாவற்றை சமாளித்து எதிர் நீச்சல் போட்டுத்தான் வாழ வேண்டும்!

அப்போது காட்டுவாசி ஒருவன் மேலே இருந்து அவர்களை தாக்க தயாராக இருந்தான்.
ஏய்! அந்த மானிடர்கள் இங்கேதான் பதுங்கியிருக்கிறார்கள்!
விடாதீர்கள்! அவர்களை கொல்லுங்கள்!
ஆச்!
ஆ...!
சதக்
ஈட்டிகள் சரமாரியாக வந்து விழுந்தன.
ஆ...! காட்டு மிராண்டிகள் திரும்பவும் வந்து விட்டார்கள்!

டாலி! நீ பதுங்கிக்கொள். நான் இவர்களை பார்த்துக் கொள்கிறேன்!
திடீரென்று மேலே இருந்த காட்டுவாசிகள் அனைவரும் காணாமல் போனார்கள்.

டாலி! அவர்களில் ஒருவரைக்கூட காணவில்லை?

அங்கே இரட்டைதுதிக்கை யானை காட்டுவாசிகளை பிடித்து சுழற்றி அடித்துக் கொண்டிருந்தது

அவர்களை எங்கே? மாயமாக மறைந்து விட்டார்களா? எல்லாம் மாயமாக இருக்கிறதே!
மேலே வந்த பிளாஷ் கார்டனும் டாலியும் யானையைப் பார்த்ததும் அதிர்ந்து போனார்கள்.
யானை அவர்களைக் விரட்ட ஆரம்பித்தது.
அய்யோ...! அதே இரட்டை துதிக்கை யானை!

டாலி! நிற்காதே. திரும்பிப் பார்க்காமல் ஓடு!
டாலி... டாலி...! உங்களுக்கு ஒன்றும் ஆபத்தில்லையே?
அசுராவின் ஆட்கள் அங்கே வந்தார்கள்.
டாலி நீங்கள் அப்படிப்போய் நில்லுங்கள். யானை யை நான் பார்த் துக்கொள்ளு கிறேன்!

வந்தவர்கள் யானையை நோக்கி அம்பு எய்தார்கள்.
சதக்...!
குா...குர்...குர்ர்ர்...!

யானை கடுமையாக பிளிறியது.
முடிவில் அப்படியே சரிந்து விழுந்தது.

பயப்படாதீர்கள் டாலி! அகூராதான் உங்களை தேடி கண்டுபிடித்து வர எங்களை அனுப்பினார்!

சர்கோவ் நீங்கள் இறந்து விட்டதாக கூறினார்! உங்களை உயிரோடு பார்த்ததில் பரமதிருப்தி!
ரொம்ப நன்றி! எங்களை தேடி ரொம்பவும் சிரமப் பட்டிருப்பீர்கள்!
வாருங்கள் இங்குதான் எங்கள் கோட்டை இருக்கிறது.
வாருங்கள் போகலாம்!
பிளாஷ் கார்டன் டாலி இருவரையும் அசூராவின் அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.
அடேயப்பா! எவ்வளவு பிரமாண்டமான அரண்மனை! என் வாழ்க்கையில் இப்படி ஒன்றை பார்த்ததில்லை.
எங்களுக்காக அசூரா முயற்சி எடுத்துக்கொள்வதில் ரொம்ப சந்தோசம்! நாங்கள் உடனடியா பூமிக்குத் திரும்பவேண்டும்!
(முடிந்தது)

நரியின் தந்திரம்

அந்த மலையின் மேல் ஒரு நரி இருந்தது. ஒருநாள் அது, பசியினால் அலைந்து திரிந்துகொண்டிருந்தது. அப்பொழுது வழியில் ஓர் யானை இறந்து கிடந்ததைக் கண்டது. அதற்கு மகிழ்ச்சிதான். ஆனால் அதன் தோலை பிய்த்தெடுத்து அதன் மாமிசத்தை தின்ன அதற்கு வல்லமை கிடையாதே! வருத்தமாய் அதன் பக்கத்திலேயே உட்கார்ந்துவிட்டது நரி.

அப்பொழுது அந்தப் பக்கமாக சிங்கம் ஒன்று வந்தது. உடனே நரி அதற்கு வணக்கம் செய்து எழுந்தது. 'நீ யார்' என்று கேட்டது சிங்கம்.

"நான் தங்கள் அடியேன். தாங்கள் அடித்துப்போட்ட யானைக்குக் காவலாக இருக்கிறேன்."

"இல்லை இல்லை. இதை நான் கொல்லவில்லை. வேறு எவனாவது அடித்துப் போட்டிருப்பான். அல்லது அது தானாகவே இறந்ததோ! எப்படியிருந்தாலும் இப்பொழுது நான் இதைப் புசியேன். வேண்டுமானால் நீயே எடுத்துக்கொள்" என்றது சிங்கம்.

"ஆகா! உங்கள் தாராளகுணத்தை நான் என்ன என்பேன்! பெரியோர்கள் ஆண்மையைக் கொண்டே சம்பாதிக்கிறார்கள்" என்ற நரியின் சொற்களைக் கேட்டுக்கொண்டே சிங்கம் சென்றுவிட்டது.

பிறகு அந்தப் பக்கம் புலி ஒன்று வந்தது. அதைக் கண்ட நரி "இந்த சமயத்தில் இந்தப் பக்கம் ஏன் வந்தாய்? இந்த யானையைக் கொன்ற சிங்கம், இங்கு ஏதேனும் புலி வந்தால் அதற்குத் தெரியாமல் எனக்கு வந்து சொல்லு, உடனே நான் அதைக்கொன்று எறிவேன்" என்று சொல்லிப் போயிற்று.

சிங்கம் யானையை அடித்துக் குளிக்கச் சென்றபோது, அதை ஒரு புலி எச்சில் செய்து விட்டதாம் அதிலிருந்து அது புலியின்மேல் குறி வைத்துள்ளது" என்றது நரி.

"அப்படியா? நீ கூறியது நல்லதாய்ப் போயிற்று. இதோ நான் ஓடிப்போகிறேன் நீ போய் சொல்லி விடாதே!" என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போயிற்று.

அதன் பிறகு அந்தப் பக்கம் ஒரு வானரம் வந்தது முதலில் வந்தவனைத் தொழுது அனுப்பினோம், இரண்டாவது வந்ததை பயமுறுத்தி அனுப்பினோம். இப்பொழுது இவனை



வைத்துக்கொண்டு இந்த யானையைக கிழித்துப்போடப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்தது நரி.

"எங்கே வெகுநாட்களாக உன்னைக் காணவில்லை! பசியோடு இருக்கிறாய்ப்போல் தெரிகிறதே! இந்த யானையை சிங்கம் பார்த்துக் கொள்ளச் சொல்லி குளிக்கப் போயிருக்கிறது. அதற்குள் நான் கொஞ்சம் பதம் பார்க்கலாம் போல் தோன்றுகிறது. நீ சற்று கிழித்துப் போடேன் சிங்கம் திரும்புவதற்குள் ஓடிவிடுவோம்" என்று பவ்வியமாகப் பேசிற்று.

"இதோ இப்பொழுதே கிழிக்கிறேனே" என்று அந்த யானையைக் கிழித்தது. வானரம் உடன் அதோ சிங்கம் வந்துவிட்டது ஓடு: ஓடிவிடு என்று துரத்திவிட்டு, மாமிசத்தை சுவையாகத் தின்னக் தொடங்கியது நரி.

அதற்குள் அங்கு வேறொரு நரி. வந்தது. அதைச் சண்டையிட்டுத் துரத்தியது. அதன் பிறகு வேண்டு மட்டும் யானை மாமிசத்தைத் தின்று சென்றது நரி.

மரம்!

செல்வி. இ. ஜீவா

மரமே மரமே மனிதர் விரும்பும்
மரமே மரமே மலரும் மரமே!
நாட்டிலும் காட்டிலும் மலையிலும் வளர்ந்து
நாட்டுக்கு உதவும் நல்ல மரமே!

மழைக்குக் காரணமாய் வளந்தரும் மரமே
பிழைக்கும் மக்களைப் பிழைக்கச் செய்யும்
உயிர்க்காற்று அளிக்கும் உன்னத மரமே
உயிர்க்கு உயிராக உள்ளாய் மரமே!

மக்களின் வாழ்வில் மலர்ச்சி ஊட்டத்
தக்கநன் மரமே தண்ணருள் மரமே!
வெய்யிலின் கொடிய வெப்பம் தணித்து
உய்யும் படிஉன் அடியிலே நிற்போம்!

உன்னை வெட்டிச் சாய்க்கும் வரையில்
உன்நிழல் தந்தே உதவுவாய் மரமே!
கொல்லுவார் தமக்கும் குளிர்நிழல் தரும்உன்
நல்ல குணத்தை நயந்து மகிழ்வேன்!

* * *

அடுத்த காமிக்ஸ்

முகமூடிவீரர்

மாயாவி

தோன்றும்



கடல் புதையல்

ஆழ்கடலுக்குள் ஓர் இளம் பெண்ணை கொல்ல முயற்சி நடக்கிறது! விடுவாரா மாயாவி?

படிக்கத் தவறாதீர்கள்!

விறுவிறுப்பான படக்கதை!

ஜூன் 16-ம் தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600007

Registered as Newspaper in Sri Lanka